# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

## 2002 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, நிருவாக மேன்முறையீடுகள் நியாயசபைச் சட்டம்

(2002, மாச்சு மாதம் 25 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)


அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

2002, மாச்சு மாதம் 27 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1. அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

## 2002 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, நிருவாக மேன்முறையீடுகள் நியாயசபைச் சட்டம்

[2002 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 25 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.ஒ - 4/2002
4675

**நிருவாக மேன்முறையீடுகள் நியாயசபையொன்றை அமைப்பதற்கு ஏற்பாடுசெய்வதற்கும் ; மேன்முறையீடுகள் தொடர்பில் அத்தகைய நியாயசபையின் தத்துவங்களையும் அத்தகைய நியாயசபையினால் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறையையும் குறித்துரைப்பதற்கும் ; அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

1. இச்சட்டம் 2002 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, நிருவாக மேன்முறையீடுகள் நியாயசபைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். கருக்கப்பெ

2. (1) அரசியலமைப்பின் 59 ஆம் உறுப்புரையின் (1) ஆம் பந்தியின்கீழ் தாபிக்கப்படும் நிருவாக மேன்முறையீடுகள் நியாயசபை, (இது இதனகத்துப் பின்னர் "நியாயசபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பகிரங்க அலுவலரொருவராக இருபது ஆண்டுகளுக்கு மேலான அனுபவத்தை அல்லது சட்ட உயர்தொழிலில் பத்தாண்டுகளுக்கு மேலான அனுபவத்தைக் கொண்டுள்ள ஆட்களிடையேயிருந்து நீதிச்சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் மூன்று உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் ; இவர்களுள் ஒருவர் அதன் தவிசாளராக நியமிக்கப்படுதல் வேண்டும். நிருவாக மேன்முறை நியாயசபை அமைத்த

(2) தவிசாளருட்பட நியாயசபையின் உறுப்பினர்களினது பதவிக்காலங்கள் மூன்றாண்டுகளாதல் வேண்டும்.

3. நியாயசபையானது — நியாயசபை தத்துவங்க

(அ) அரசியலமைப்பின் IX ஆம் அத்தியாயத்தின்கீழ் அதன் தத்துவங்களைப் பிரயோகிக்கையில் பகிரங்க சேவை ஆணைக்குழுவினால் ;

(ஆ) அரசியலமைப்பின் XVIIIஅ என்னும் அத்தியாயத்தின்கீழ் அதன் தத்துவங்களைப் பிரயோகிக்கையில் தேசியப் பொலிசு ஆணைக்குழுவினால்,

ஆக்கப்படும் ஏதேனும் கட்டளைக்கு அல்லது முடிபுக்கு எதிராக நியாயசபைக்குச் செய்யப்படும் ஏதேனும் மேன்முறை யீட்டைக் கேட்டுத் தீர்மானிப்பதற்கு தத்துவம் கொண்டிருத்தல் வேண்டும்.

மேன்முறை யீடொன்றைச் செய்வதற்கான நடவடிக்கைமுறை.

**4.** (1) விடயத்துக்கேற்ப, பகிரங்க சேவை ஆணைக்குழுவினால் அல்லது தேசியப் பொலிசு ஆணைக்குழுவினால் ஆக்கப்படும் கட்டளை அல்லது முடிபு ஒன்றினால் இன்னலுறுகின்றவரான விடயத்துக்கேற்ப, எவரேனும் பகிரங்க அலுவலர் அல்லது பொலிசு அலுவலர், அத்தகைய கட்டளையை அல்லது முடிபைப் பெற்ற தேதியிலிருந்து நான்கு வாரங்களுக் குள்ளாக நியாயசபைக்கு எழுத்தில் மேன்முறையீடொன்றைச் செய்யலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் நியாயசபைக்குச் செய்யப்படும் மேன்முறையீடு ஒன்று, கட்டளையை அல்லது முடிபை எந்த ஏதுக்களின்மீது விடயத்துக்கேற்ப, இன்னலுறுகின்ற பகிரங்க அலுவலர் அல்லது பொலிசு அலுவலர் மாற்றுவதற்கு, வேறுபடுத்துவதற்கு அல்லது நீக்குவதற்கு நாடுகின்றாரோ அந்த ஏதுக்களைச் சுருக்கமாகவும் திட்டவட்டமாகவும் எடுத்துக்காட்டுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய அலுவல ரால் ஒப்பமிடப்படுதலும் வேண்டும்.

பகிரங்க சேவை ஆணைக்குழுவுக்கும் தேசியப் பொலிசு ஆணைக்குழுவுக்கும் அறிவித்தல் வேண்டும்.

**5.** (1) நான்காம் பிரிவின்கீழ் மேன்முறையீடொன்றைப் பெற்றதன் மேல் நியாயசபையானது அத்தகைய நிகழ்வுபற்றி விடயத்துக்கேற்ப, பகிரங்க சேவை ஆணைக்குழுவுக்கு அல்லது தேசியப் பொலிசு ஆணைக்குழுவுக்கு அறிவித்தல் வேண்டும் என்பதுடன், உடனடியாக அத்தகைய மேன்முறையீட்டின் பிரதி ஒன்றைத் தோதான ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைத்தலும் வேண்டும்.

(2) விடயத்துக்கேற்ப, பகிரங்க சேவை ஆணைக்குழு அல்லது தேசியப் பொலிசு ஆணைக்குழு அத்தகைய மேன்முறையீட்டுக்கு அல்லது அதற்கெதிராக அதன் ஆட்சேபனைகள் எவையேனுமிருப்பின் அவற்றை நியாயசபையின் கவனத்துக்கென அதன்மேல் நியாயசபை முன்னர் வைப்பதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

நியாயசபை முதற்றோற்ற அளவிலான குறையொன்று உள்ளதெனத் தன்னைத் திருப்திப்படுத்துதல்.

6. நியாயசபையானது, அதற்குச் செய்யப்பட்ட மேன்முறையீடொன்றில் தரப்பட்ட ஏதுக்களைக் கருத்துக்கெடுப்பதன்மீதும் முதற்றோற்ற அளவிலான குறை ஒன்று உள்ளதெனத் திருப்திப்படுவதன்மீதும் –

(அ) அத்தகைய மேன்முறையீட்டை ஏற்றுக் கவனிக்கலாம்;

(ஆ) விடயத்துக்கேற்ப, பகிரங்க சேவை ஆணைக்குழுவிடமிருந்து அல்லது தேசியப் பொலிசு ஆணைக்குழுவிடமிருந்து அறிக்கை ஒன்றைக் கோரலாம் ;

(இ) மேன்முறையீட்டில் தரப்பட்டுள்ள ஏதுக்களுடன் தொடர்புபடுகின்றதென நியாயசபை அபிப்பிராயப் படுகின்ற ஏதேனும் ஆவணத்தை அல்லது வேறு பொருளைக் காண்பிக்குமாறு விடயத்துக்கேற்ப, பகிரங்க சேவை ஆணைக்குழுவை அல்லது தேசிய பொலிசு ஆணைக்குழுவைத் தேவைப்படுத்தலாம்;

(ஈ) பகிரங்கசேவை ஆணைக்குழுவின் அல்லது தேசியப் பொலிசு ஆணைக்குழுவின் கட்டளையினால் அல்லது முடிபினால் பாதிக்கப்பட்டிருக்கும் சாத்தியங் கொண்டவரென நியாயசபை, கருதுகின்ற, விடயத்துக் கேற்ப, அதே வகுதியினரான வேறு எவரேனும் பகிரங்க அலுவலருக்கு அல்லது பொலிசு அலுவலருக்கு அறிவித்தல் கொடுத்து, அத்தகைய அறிவித்தல் அவரால் பெற்றுக்கொள்ளப்பட்ட தேதியிலிருந்து இரண்டு வார காலப்பகுதிக்குள்ளாக அத்தகைய மேன்முறையீடு சம்பந்தமாக நியாயசபை முன்னர் அத்தகைய அலுவலர் முன்வைக்க விரும்பும் ஏதேனும் விடயத்தை நியாயசபை முன்னர் காண்பிக்குமாறு அத்தகைய அலுவலரைத் தேவைப் படுத்தலாம்;

மேன்முறையீடுகளைத் தீர்த்தல்.

7. நியாயசபையானது இச்சட்டத்தின்கீழ் அதற்குச் செய்யப் படும் ஏதேனும் மேன்முறையீட்டை, அத்தகைய மேன்முறையீடு பெறப்பட்ட தேதியிலிருந்து இரண்டு மாத காலப்பகுதிக்குள்ளாகக் கேட்டு இறுதியாகத் தீர்த்துவைத்தல் வேண்டும்.

நியாயசபையின் முடிபு.

8. (1) நியாயசபையின் முடிபு தவிசாளரின் கைப்பட்டதாதல் வேண்டும் என்பதுடன், விடயத்துக்கேற்ப, பகிரங்க சேவை ஆணைக்குழுவுக்கும் அல்லது தேசியப் பொலிசு ஆணைக் குழுவுக்கும் மேன்முறையீட்டைச் செய்த பகிரங்க அலுவலருக்கும்

அல்லது பொலிசு அலுவலருக்கும் 6 ஆம் பிரிவின் (ஈ) என்னும் பந்தியின்கீழ் நியாயசபையினால் அறிவித்தல் கொடுக்கப்பட்ட வேறெவரேனும் பகிரங்க அலுவலருக்கும் அல்லது பொலிசு அலுவலருக்கும் எழுத்தில் தெரியப்படுத்தப்படுதலும் வேண்டும். நியாயசபையின் முடிபு பெரும்பான்மையோரின் முடிபாதல் வேண்டும்.

(2) நியாயசபையினால் செய்யப்படும் முடிபு இறுதியானதும் முடிவானதுமாதல் வேண்டும் என்பதுடன், நீதிமன்றமொன்றிலான ஏதேனும் துடர்ச்சியில் அல்லது வழக்கு நடவடிக்கைகளில் கேள்விக்குட்படுத்தப்படுதலுமாகாது.

பயின் ...ர்களும் ...யாளர்களும்.

9. (1) நியாயசபையின் தவிசாளர், நீதிச்சேவை ஆணைக்குழுவின் கலந்தாலோசனையுடன், நியாயசபையின் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கு அவசியமாகக்கூடியதான அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமிக்கலாம்.

(2) ஒராம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்படும் அலுவர்களினதும் சேவையாளர்களினதும் அகற்றுகையும் அவர்கள்மீதான ஒழுக்காற்றுக் கட்டுப்பாடும் நீதிச்சேவை ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

...பைக் ...க துடர்ச்சி ... குற்ற ...எதுவும் ...லாகாது.

10. நியாயசபையின் எவரேனும் உறுப்பினருக்கு, அலுவலருக்கு அல்லது சேவையாளருக்கு எதிராக, இச்சட்டத்தின்கீழ் அவரால் நல்லெண்ணத்துடன் செய்யப்படும் அல்லது செய்யாது விடப்படும் அல்லது நியாயசபையின் பணிப்புகளின்மீது அவரால் செய்யப்படும் ஏதேனும் சட்டமுறையான செயலுக்காக துடர்ச்சி அல்லது குற்றவழக்கு எதுவும் அமைதலாகாது.

...ம ... ல் சிங்கள ...மேலோங்கி

11. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

---

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387: (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.